2021 செப்டம்பர் 2]

கூறியிருக்கின்ற தமிழ்நாடு அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். 'வலிமை' என்ற பெயரில் புதிய brand-*ல் சிமென்டை அறிமுகப்படுத்துவதாகச் சொல்லியிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த நன்றிக்கு நானும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லிவிடுங்கள்.*

வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது, மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

12—

இட ஒதுக்கீடு

***384—திரு. ப. அப்துல் சமது:**

மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாற்றுத் திறனாளிகளுக்கு அரசுப் பணிகளில் 4 சதவிகித இட ஒதுக்கீட்டை முழுமையாக அமல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

ஆம். மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு வேலைவாய்ப்புகளில் உள்ள 4 சதவிகித இட ஒதுக்கீட்டை முழுமையாக அமல்படுத்த அரசு ஆவன செய்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது அவர்கள்.

திரு. ப. அப்துல் சமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மாற்றுத் திறனாளிகள்' என்கின்ற பெயரினை வழங்கி, அவர்களை கண்ணியப்படுத்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைப் போற்றுகிறேன். மாற்றுத் திறனாளிகளினுடைய 4 சதவிகித இட ஒதுக்கீட்டை முழுமையாக நிரப்புவதற்கு முதலில் அவர்களுக்கான பணியிடங்களைக் கண்டறிவது என்பது மிகவும் முக்கியமானது. அந்தப் பணியிடங்களைக் கண்டறியக்கூடிய பணிகள் மேற்கொள்ளப்படும் என்று மாற்றுத் திறனாளிகள் நலத் துறையினுடைய கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்காக தனி முழு நேர ஆணையம் ஒன்று அமைக்க வேண்டுமென்பது முக்கியமானதாக இருக்கிறது. எங்கெங்கெல்லாம், அவர்களுக்கான பணியிடங்கள் இருக்கின்றன, அதாவது, அரசுத் துறைகளிலே, தனியார் துறைகளிலே, அரசு உதவி பெறக்கூடிய துறைகளிலே, பள்ளிகளிலே, கல்லூரிகளிலே என எங்கெங்கெல்லாம் வாய்ப்புகள் இருக்கின்றன என்பதைக் கண்டறிவது, அவர்களுக்கான பணிகளை வழங்குவதற்கு ஏதுவாக இருக்கும். அதேபோன்று, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையத்திலும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ப. அப்துல் சமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளி உறுப்பினரை நியமித்தால், இட ஒதுக்கீட்டை முழுமையாக நிவர்த்தி செய்வதற்கு வசதியாக இருக்கும். அவை நிறைவு செய்யப்படுமா, நிவர்த்தி செய்யப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016–ன்படி, தமிழ்நாட்டில் அனைத்து அரசுத் துறைகள், குழுமங்கள், வாரியங்கள் மற்றும் அரசுக் கட்டுப்பாட்டில்

2021 செப்டம்பர் 2]

செயல்படும் நிறுவனங்களில், மாற்றுத் திறனாளிகளுக்கு 4 சதவிகித இட ஒதுக்கீட்டு அடிப்படையில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. இந்த இட ஒதுக்கீட்டினை நடைமுறைப்படுத்தும் விதமாக, 'C' மற்றும் 'D' பிரிவு பதவியிடங்கள் அனைத்தும் மாற்றுத் திறனாளிகளுக்கு பணிபுரிய உகந்த பணியிடங்களாகக் கண்டறியப்பட்டு, ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், 'A' மற்றும் 'B' பிரிவு பதவியிடங்களைப் பொறுத்தவரையில், 559 பதவியிடங்கள் மாற்றுத் திறனாளிகளுக்குப் பணிபுரிய உகந்த பணியிடங்களாகக் கண்டறியப்பட்டு, ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், மேற்படி சட்டத்தின் பிரிவு 34(1)-ன்கீழ் அனைத்துத் துறைகளிலுமுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான பின்னடைவு காலிப் பணியிடங்களுக்கான விவரங்களைக் கணக்கெடுத்து வருகிறோம். அதில், தற்போது 1,095 இடங்கள் காலிப் பணியிடங்களாகக் கணக்கிடப்பட்டுள்ளன; அதற்கும் சிறப்புத் தேர்வு ஒன்று நடத்த வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, அனைத்துத் துறைகளிலும், தேர்வு ஆணையங்கள் மற்றும் தேர்வு அலுவலர்கள், அதாவது, சில பணியிடங்களுக்கான தேர்வுகள் தேர்வாணையம் மூலம் நடத்தப்படுகின்றன; அதனதற்குரிய ஆணையங்களும், தேர்வு அலுவலர்களும் அதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அந்த backlog vacancies*-ஐ நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள் என்பதையும் நான் இங்கு பதிவு செய்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது அவர்கள்.*

திரு. ப. அப்துல் சமது: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021-2022 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில், மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்கு, மாற்றுத் திறனாளிகள் மேம்பாட்டிற்கு இதுவரை இல்லாத அளவில் 813.63 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ள மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பராமரிக்கக்கூடிய நிலையில் இருக்கக்கூடிய மாற்றுத் திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித் தொகை, அதாவது, அவர்களால் தன்னியல்பாக எழுந்து எதையும் செய்ய முடியாது; பராமரிப்பிற்காக ஒருவரை வைத்து, அவர்தான் பராமரிக்க வேண்டும் என்ற நிலையில் இருக்கக்கூடியவர்களுக்கான மாதாந்திர உதவித் தொகையை ரூ.1,000/-லிருந்து ரூ.1,500/- ஆக உயர்த்தி வழங்கியிருக்கிறீர்கள். நன்றி.*

முற்பகல் 10–10

அதேபோன்று மாற்றுத் திறனாளிகள் அனைவருக்குமான உதவித் தொகையை கருணை கொண்டு, ரூ.1,000/–லிருந்து ரூ.1,500/- ஆக தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் உயர்த்தி வழங்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்தாலோசித்து, அவருடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அரசு உரிய முடிவெடுக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

13—

பேருந்து வசதி

***448—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணத்திலிருந்து திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள், பந்தநல்லூர் வழியாக திருமங்கைச்சேரிக்கு காலை மற்றும் மாலை நேரங்களில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தலைவர் அவர்களை வணங்கி, திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், திருமங்கைச்சேரிக்கு தமிழ்நாடு